Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 46/2024**

DATE :16.06.2026

Depositions of witness for Prosecution

PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | தமிழரசன் | Caste | |
| Father/Husband's Name | தங்கராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16 th day of June 2026

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு கார்த்திக்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தம்பிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பெயின்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணன் ஆவார். இந்த வழக்கில் இறந்து போன சோலையம்மாள் என்னுடைய பாட்டி ஆவார். கடந்த 13.12.2022 ம் தேதியன்று தான் வேலைக்கு சென்று விட்டு சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்த பொழுது அ.சா.2 பாலமுருகன் எனக்கு போன் செய்து அக்கனாபுரம் மெயின் ரோட்டில் என்னுடைய பாட்டி பேருந்திலிருந்து விழுந்து விபத்தில் சிக்கி காயப்பட்டதாக கூறினார். பின்னர் சபவை இடத்திற்கு நானும் என்னுடைய

அண்ணனும் சென்றோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே காயப்பட்ட என்னுடைய பாட்டியை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். கோட்டையூர் அருகே வந்த ஆம்புலன்ஸில் நானும் என்னுடைய அண்ணனும் ஏறிக்கொண்டோம்.

நேரடியாக வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு வந்தோம். முதல் சிகிச்சை அளித்துவிட்டு உடல்நிலை மோசமாக இருக்கின்றது என்று கூறி மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அதே 108 ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள். என்னுடைய அண்ணனும் மதினியும் பாட்டியுடன் 108 ஆம்புலன்ஸில் மதுரைக்கு சென்று கொண்டிருந்தார்கள். நான் ஊரில் இருந்தேன். 108 ஆம்புலன்ஸ் சுப்புலாபுரம் அருகே சென்று கொண்டிருந்தபோது என்னுடைய பாட்டி இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தார்கள். பின்னர் நடைபெற்ற சம்பவம் குறித்து வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் என்னுடைய சகோதரர் மான்ராஜ் புகார் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய பாட்டி பேருந்தில் ஏறுவதை கவனிக்காமல் பேருந்து ஓட்டுனர் பேருந்து இயக்கியதால் நிலை தடுமாறி கீழே விழுந்து என்னுடைய பாட்டிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பேருந்து ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கு இறந்து போன சோலையம்மாள் என்ன முறையில் பாட்டி என்றால் என்னுடைய அம்மாவை பெற்ற அப்பாவும் சோலை அம்மாளும் உடன் பிறந்தவர்கள். என்னுடைய வீடும் சோலையம்மாளின் வீடும் அருகருகே உள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சி பாலமுருகன் எங்கே குடியிருந்து வருகிறார் என்றால் அக்கனாபுரத்தில்

குடியிருந்து வருகிறார். விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். விபத்தை எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். புகார் மனுவை நான் தான் எழுதினேன் என்று சொன்னால் சரிதான்.

புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். புகார் மனுவில் யாரெல்லாம் கையெழுத்து செய்தார்கள் என்றால் நானும் என்னுடன் இருந்தவர்களும் கையெழுத்து செய்தார்கள். காயம்பட்ட நபரை வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரும்பொழுது நானும் என்னுடைய சகோதரர் மான்ராஜ் என்பவரும் உடன் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடைபெற்ற உடனேயே புகார் மனு கொடுத்து விட்டோமா என்றால் காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் இறந்து விட்டார் என்று தெரிந்த பின்பு தான் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தோம். எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு